மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : ஆம்.

திரு. மு. மாரிமுத்து : அது எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : 1975-76-ல் பார்ட் 2 ஸ்கீமில் சேர்த்துக்கொள்ளலாம் என்று இயக்குநர் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அது ஆராய்ச்சியில் இருக்கிறது. அது அநேகமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: தலைவரவர்களே, மதுரையில் உள்ள ஆத்தூர் தொகுதியில், ஆத்தூரில் அரிசன மாணவர்கள் இல்லம் ஒன்று வேண்டுமென்று மூன்றாண்டுகளாகக் கேட்டுக் கொண்டு இருக்கிறோம். ஆகவே, இந்த ஆண்டாவது ஆத்தூரில் அரிசன மாணவர்கள் இல்லம் ஒன்றை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, ஆத்தூர் என்பதற்கு இங்கே தனியாக விவரம் இல்லை. இது செஞ்சிமலையில் அரிசன மாணவர்கள் விடுதி ஒன்றை துவக்கு வது பற்றிய கேள்வியாகும். ஆகவே, அதற்கு மட்டும் தான் குறிப்பு இருக்கிறது. வேண்டுமானால், தனிக் கேள்வி போட்டால் அதற்கான விடை அளிக்க முடியும்.

திரு. கோ. செபமாலை: தலைவரவர்களே, விருத்தாசலம் தாலுக்காவில் தொழுதூரில் அரிசன மாணவர்கள் உணவு விடுதி ஒன்றைத் திறக்கப்போவதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அது குறித்து நாங்கள் கூடக் கேட்டு இருக்கிறோம். அதைத் திறப்பதற்கான செயற்குறிப்பு உள்ளதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, தனிக் கேள்வி போடவும்.

*125 வினா—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் வட்டம், சூணம்பேடு பகுதியில் மாணவர்கள் அரிசன விடுதி ஒன்று துவங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

1975 அக்டோபர் 29]

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : ஆம்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இந்த விடுதியைத் தொடங்க சுமார் ஓராண்டு காலந் தாழ்த்தப்பட்டு இருக்கிறது, அது ஒரு ஜமீன் ஆதிக்கத்தில் இருந்ததால், விரைவாக அந்த இடத்தில் விடுதியைத் திறக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, முன் கேள்விக்கு பதில் அளித்தபோதே சொன்னேன். இந்த விடுதியை இரண்டாவது பகுதி திட்டமாக சேர்க்க வேண்டுமென்று நம்முடைய இயக்குநர் அவர்கள் பரிந்துரை செய்து இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள் 25—10—1975-ம் நாளன்று சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பரிந்துரை ஏதுமின்றி நிறைவேற்றப் பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது:—

1. 1975-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/75).

2. தமிழ்நாடு 1975-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/75).